விரும்புகிறேன், கௌரவத்தைப் பார்க்காமல் தமிழ்நாடு அரசும் இன்றைக்கு அந்த உதாரணத்தைப் பின்பற்றி பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய அந்த ஜனநாயக விரோதமான சட்டத்தை கைவிடுவதற்கு முன் வருமா ?

(முற்பகல் 10—20).

ஏன் அவர்கள் அந்த மாதிரி அறிவிப்பை வெளியிடுவதற்கு காலதாமதப்படுத்துகிறார்கள் ? அதில் அரசாங்கத்தின் நிலை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று ஒரு பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். முறைப்படி ஒரு கேள்வி மூலமாகவோ. குறுகிய கால வினா மூலமாகவோ கேட்பார்களேயானால் இருக்கிற நிலைமையை அரசு தெளிவுபடுத்த இயலும்.

(ஆ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களை நியமித்தல்.

*THIRU T. VENKATA REDDY : Point of order. Sir, under our Chief Minister's Nutritious Meals Programme Tamil supervisors have been appointed for Tamil Schools. So far, no Supervisor has been appointed in Minority language Schools teaching Kannadam, Telugu, etc. There are a number of minority people in our State they are as good Tamilians as others. They are also interested in the programme. So far, the intention of the Chief Minister is only to appoint people in Tamil Schools. So far, no Supervisor has been appointed in the Minority language Schools. Already more than one month has passed. I would like to know whether the Government has decided to include Minority languages people also in the appointment of Supervisors and if so whether the Government will come forward to appoint minority language Supervisors to the Schools urgently ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர்வைசர் என்று நியமிக்கப்படுகிறவர்கள் திருக்குறளைச் சொல்லித் தரவேண்டுமென்று அரசு எதிர்பார்த்துத்தான் நியமித்து வருகிறோம். தெலுங்குப் பள்ளியில் அவர்கள் எப்படி திருக்குறளைச் சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு புதிய பிரச்னையாக வந்திருக்கிறது, அதுபற்றி நாம் ஒரு முடிவை எடுத்ததற்குப் பின்னால் நியமிக்கப்படுவார்கள்.